RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-47 | 20 பிப்ரவரி | வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## கைவிலங்கு, கால்களில் சங்கிலி' நாடு கடத்தப்படும் சட்டவிரோத குடியேறிகளின் வீடியோவை பகிர்ந்த அமெரிக்கா

வாஷிங்டன், பிப்.20

அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியுள்ளவர்களை அந்த தேசம் நாடு கடத்திவருகிறது. அப்படி அங்கு சட்டவிரோதமாக குடியேறிய இந்தியர்கள் உட்பட பல்வேறு நாடுகளை சேர்ந்தவர்கள் சிறப்பு விமானம் மூலம் அவர்களது தாய் நாட்டுக்கே திருப்பி அனுப்பி வருகிறது அமெரிக்கா.

இந்த பயணத்தின் போது அவர்களது கையில் கைவிலங்கும், காலில் சங்கிலி பூட்டியும் அமெரிக்கா நாடு கடத்தி வருகிறது. இதுவரை 332 இந்தியர்கள் அங்கிருந்து நாடு கடத்தப்பட்டுள்ளனர். அவர்களது கைகளில் கைவிலங்கு மற்றும் கால்களில் சங்கிலி பூட்டியது விமர்சனத்துக்கு உள்ளானது. இந்திய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதற்கு கடுமையாக எதிர்வினையாற்றி இருந்தனர்.



இந்த சூழலில் தான் அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கி உள்ளவர்களை அந்த தேசம் நாடு கடத்தும் வீடியோவை வெளியிட்டுள்ளது. அதில் விமானத்தில் ஏற்றப்படும் சட்ட விரோத குடியேறிகளின் கைகளில் கைவிலங்கு மற்றும் கால்களில் சங்கிலி பூட்டப்பட்டுள்ளது.

சுமார் 41 நொடிகள் ரன் டைம் கொண்ட இந்தியா வீடியோவில் அமெரிக்க அதிகாரிகள் அதை உறுதி செய்கின்றனர். புறப்பட தயாராக இருக்கும் விமானத்தில் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் ஏற்றப்படுவதற்கு முன்பு கை மற்றும் கால்களில் சங்கிலி பூட்டப்படுகிறது. மேலும், அதிகாரிகள் ஒரு கூடையில் இருந்து சங்கிலியை எடுத்து சாலையில் பிரித்து வைக்கும் காட்சியும் இதில் இடம் பெற்றுள்ளது.

அமெரிக்காவில் முறையான ஆவணங்கள் இல்லாமலும் சட்ட விரோதமாகவும் குடியேறியவர்களைக் கண்டறிந்து நாடு கடத்தி வருகிறார் அந்த நாட்டு அதிபர் டொனால்ட் ட்ரம்ப் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேசிய பேரிடர் மீட்பு நிதியத்தின் கீழ்5 மாநிலங்களுக்கு ரூ.1554 கோடி பேரிடர் நிதி... தமிழகம், கேரளாவுக்கு அறிவிப்பில்லை!

புதுடெல்லி, பிப்.20

தேசிய பேரிடர் மீட்பு நிதியத்தின் கீழ் ஆந்திரப் பிரதேசம் உள்ளிட்ட ஐந்து மாநிலங்களுக்கு கூடுதலாக ரூ.1554.99 கோடி நிதி வழங்க மத்திய உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்திருப்பதாக உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமித் ஷா வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக மோடி அரசு ஒரு பாறை போல் நிற்கிறது. இன்று, உள்துறை அமைச்சகம் ஆந்திரப்பிரதேசம், நாகாலாந்து, ஒடிசா, தெலங்கானா மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்களுக்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ரூ.1554.99 கோடியை கூடுதலாக வழங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மாநில பேரிடர் நிவாரண நிதிக்காக 27 மாநிலங்களுக்கு ரூ.18,322.80 கோடி ஏற்கனவே வழங்கப்பட்ட நிலையில், இந்த தொகை கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது" என தெரிவித்துள்ளார்.



தற்போது 5 மாநிலங்களுக்கு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள ரூ.1554.99 கோடியில், ஆந்திராவிற்கு ரூ.608.08 கோடியும், நாகாலாந்திற்கு ரூ.170.99 கோடியும், ஒடிசாவிற்கு ரூ.255.24 கோடியும், தெலங்கானாவிற்கு ரூ.231.75 கோடியும், திரிபுராவுக்கு ரூ.288.93 கோடியும் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தமிழகம், கேரளத்துக்கு அறிவிப்பு இல்லை.. கடந்த ஆண்டு தமிழகத்தில் ஃபெஞ்சல் புயல் கடும் சேதங்களை ஏற்படுத்தியிருந்தது. இதனை ஒட்டி புயல் நிவாரணமாக ரூ.37,000 கோடியை தமிழக அரசு கோரியிருந்தது. இந்நிலையில் மத்திய அமைச்சர் அமித் ஷா ஒதுக்கியுள்ள நிவாரண நிதியில் தமிழகத்துக்கு எந்த ஒதுக்கீடும் இல்லை. இதேபோல் வயநாடு நிலச்சரிவு உள்ளிட்ட கடும் இயற்கை பேரிடர்களை எதிர்கொண்ட கேரளாவுக்கும் நிதி ஒதுக்கீடு சார்ந்து எந்த அறிவிப்பும் இன்றைய அமைச்சரின் பதிவில் இடம்பெறவில்லை.

முன்னதாக நேற்று, தமிழகத்தில் ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட கடலூர், விழுப்புரம், கிருஷ்ணகிரி உட்பட 18 மாவட்டங்களின் விவசாயிகளுக்கு ரூ.498.8 கோடி நிவாரண நிதி வழங்க முதல்வர் உத்தரவிட்டிருந்தார். இதன்மூலம் 5 லட்சத்து 18,783 விவசாயிகள் பயன்பெறுவர். இந்த நிவாரணத் தொகை நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் ஓரிரு நாட்களில் வரவு வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## டெல்லியின் புதிய முதல்வர் யார்? பாஜக எம்எல்ஏக்கள் முக்கிய ஆலோசனை

புதுடெல்லி, பிப்.20

டெல்லி பேரவைத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு 11 நாட்கள் கடந்து, 27 ஆண்டுகளுக்கு பின்பு தலைநகரில் ஆட்சியை கைப்பற்றிய நிலையில் புதிய முதல்வரை முடிவு செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட பாஜக எம்எல்ஏக்கள் நேற்று (புதன்கிழமை) இரவு 7 மணிக்கு கூட இருக்கிறார்கள்.

டெல்லியின் அடுத்த முதல்வர் இன்று (வியாழக்கிழமை) ராம்லீலா மைதானத்தில் நடைபெற இருக்கும் நிகழ்ச்சியில் பதவி ஏற்க இருக்கிறார். அதற்கான ஏற்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. முதல்வர் யார் என்றே அறிவிக்காமல் விழா ஏற்பாடுகள் நடைபெறுவதை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.



இந்நிலையில் அடுத்த முதல்வர் யார் என்பது குறித்து பாஜகவினர் இன்னும் மவுனம் காத்து வருகின்றனர். முன்னாள் முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலை தோற்கடித்த பாஜகவின் பர்வேஷ் வர்மா, ரேகா குப்தா, விஜயேந்தர் குப்தா, சதிஸ் உபாத்யாய்,. ஆஷிஸ் சூட், பவன் ஷர்மா மற்றும் அஜய் மஹாவர் ஆகியோர் முதல்வர் பதவிக்கான போட்டியில் உள்ளனர்.

இதுகுறித்து பாஜக வட்டாரங்கள் கூறுகையில், "பாஜக கட்சி அலுவலகத்தில் எம்எல்ஏக்கள் கூடியதும், கூட்டம் தொடங்கும். எம்எல்ஏகள் மாலை 6.30 மணி முதல் 7 மணிக்குள் அங்கு கூடுவார்கள். மத்திய தலைமையின் சார்பில் மூத்த தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்பார்கள். கூட்டம் முடிந்த பின்பு புதிய முதல்வரின் பெயர் அறிவிக்கப்படும்.

டெல்லியின் முதல்வரை குடியரசுத் தலைவரே நியமிக்கிறார். பாஜக எம்எல்ஏக்கள் தேர்வு செய்யும் முதல்வரின் பெயரை துணைநிலை ஆளுநர் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைப்பார். அவரின் ஒப்புதலுக்கு பின்பு, துணைநிலை ஆளுநர் புதிய முதல்வர் மற்றும் அமைச்சர்களுக்கு பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பும் செய்து வைப்பார்." என்று தெரிவித்தனர்.

புதிய அமைச்சரவையில், ஜாட், தலித், பூர்வாஞ்சலிகள், சீக்கியர்கள், உத்தராகண்டி, பனியாக்கள் இடம்பெற்றிருப்பர் என்று கூறப்படுகிறது. இதனிடையே, சட்டப்பேரவை உறுப்பினர்களின் கூட்டத்துக்கு முன்பாக கட்சி அலுவலகத்தில் டெல்லியில் பாஜக அரசு என்ற பதாகை வைக்கப்பட்டுள்ளன. அலுவலகத்தில் வருபவர்களை வரவேற்கும் விதமாக கொடிகள், அலங்காரங்கள், சிவப்பு கம்பளங்கள் விரிக்கப்பட்டுள்ளன.

2024 மக்களவைத் தேர்தலில் பாஜக தனிப்பெரும்பான்மை பெறத் தவறியிருந்தாலும், டெல்லியில் பெற்றிருக்கும் தனித்த வெற்றி, அரசியல் மேலாதிக்கம் பெற்ற கட்சி என்ற பாஜகவின் கூற்றை வலுப்படுத்துவதாய் உள்ளது. முன்னதாக, மகாராஷ்டிராவில் கிடைத்த மகத்தான வெற்றியும், ஹரியானாவில் கிடைத்த எதிர்பாராத வெற்றியும் இந்தக் கூற்றுக்கு வலுசேர்த்தன.

## இனி மோடிக்கு கோ பேக் கிடையாது, கெட் அவுட் தான்: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆவேசம்!

சென்னை, பிப்.20

திமுக கூட்டணி கட்சித் தலைவர்கள் இணைந்து நேற்று சென்னையில் மத்திய அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். இதில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தி.க.தலைவர் கி.வீரமணி, மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, விசிக தலைவர் திருமாவளவன், காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப் பெருந்தகை, தவாக தலைவர் வேல்முருகன், தமிமுன் அன்சாரி மற்றும் திமுக அமைச்சர்கள், மூத்த நிர்வாகிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



ஆர்ப்பாட்டத்தில் பேசிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், "அன்புக்கு கட்டுப்பட்டவர்கள் தமிழர்கள். ஆனால் அடக்குமுறைக்கு பயப்பட மாட்டோம், அஞ்சமாட்டோம். இது ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசுக்கு புரிய வேண்டும் என்பதற்கான அடையாளம்தான் இந்த ஆர்ப்பாட்டம்.

இந்தியை ஏற்காததால் தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய ரூ.2190 கோடி நிதியை உத்தர பிரதேசம், குஜராத் மாநிலங்களுக்கு பிரித்து கொடுத்துள்ளது ஒன்றிய அரசு. மேலும் மும்மொழி கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் நிதி ஒதுக்க முடியும் என ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் மிரட்டுகிறார்.

நாங்கள் ஒன்னும் உங்க அப்பன் வீட்டு காச கேட்கவில்லை. நாங்கள் பிச்சை,கடன் கேட்கவில்லை. தமிழ்நாட்டு மாணவர்களின் பெற்றோர்கள் கட்டிய வரிப்பணத்தைதான் நாங்கள் கேட்கிறோம். உங்கள் மிரட்டலுக்கு தமிழ்நாடு அஞ்சாது. இது திராவிட மண்.

நீங்கள் சொல்லும் இடத்தில் எல்லாம் கையெழுத்து போடுவதற்கு இது அடிமை ஆட்சி அல்ல. இது முத்துவேல் கருணாநிதி மு.க.ஸ்டாலின் அவர்களால் சுயமரியாதையுடன் வழிநடத்தப்படும் திராவிட மாடல் அரசு. தமிழ்நாடு என்றைக்கும் மும்மொழி கொள்கையை ஏற்காது. இங்கு இருமொழி கொள்கைதான். எங்களை மீண்டும் மீண்டும் மிரட்டி பார்க்க வேண்டாம். அதை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்று எங்களுக்கு தெரியும்.

**அதிமுகவுக்கு அழைப்பு!**

கட்சி பெயரில் அண்ணாவையும், திராவிடத்தையும் வைத்துக் கொண்டு இந்த பிரச்சனையில் ஒதுங்கி நிற்காதீர்கள். வேடிக்கை பார்க்காதீர்கள். கட்சி எல்லைக்கு அப்பாற்பட்டு ஒட்டுமொத்த தமிழ்நாடும் ஓரணியில் நின்று, மும்மொழி கொள்கையை எதிர்க்க வேண்டும். தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய நிதியை விரைவில் வழங்கவில்லை என்றால் இந்த ஆர்ப்பாட்டம், தமிழ்நாடு முழுவதும் போராட்டமாக மறுவதும் மாறாததும் ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசின் கையில்தான் உள்ளது.

பிரதமர் மோடி அவர்களே நீங்கள் சென்ற முறை எங்களின் உரிமைகளை பறித்தபோது தமிழ்நாட்டு மக்கள் உங்களை கோ பேக் மோடி என்று சொல்லி துரத்தி அடித்தார்கள். இதை மீண்டும் தமிழ்நாட்டு மக்களிடம் முயற்சி செய்தால் இந்தமுறை கோ பேக் மோடி கிடையாது. கெட் அவுட் மோடி என்று சொல்லி உங்களை விரட்டியடிப்பார்கள்." என கூறினார்.

## இரவோடு இரவாக நடந்த தேர்தல் ஆணையர் நியமனம் மீது ராகுல் கடும் அதிருப்தி!

புதுடெல்லி, பிப்.20

புதிய தலைமை தேர்தல் ஆணையர் நியமனம் விவகாரத்தில் காங்கிரஸ் முக்கியத் தலைவரும், மக்களவை எதிர்க்கட்சி தலைவருமான ராகுல் காந்தி தனது கடும் அதிருப்தியை பதிவு செய்துள்ளார்.



1950ம் ஆண்டு இந்திய தேர்தல் ஆணையம் உருவாக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் தலைமை தேர்தல் ஆணையரை மத்திய அரசு நியமித்து வந்தது. கடந்த 1989ல் தலைமை தேர்தல் ஆணையரோடு கூடுதலாக 2 தேர்தல் ஆணையர்கள் நியமிக்கப்பட்டனர். 1990ல் அப்போதைய வி.பி.சிங் அரசு, சட்டத்தில் திருத்தம் செய்து 2 தேர்தல் ஆணையர்கள் நியமனத்தை ரத்து செய்தார். அதன்பின் 1993ல் ஆண்டில் நரசிம்ம ராவ் அரசு, சட்டத்தில் திருத்தம் செய்து மீண்டும் 2 தேர்தல் ஆணையர்களை நியமிக்க வழிவகை செய்தது.

அதன் தொடர்ச்சியாக, 2023ம் ஆண்டு மார்ச் 2ம் தேதி உச்ச நீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் அமர்வு முக்கிய தீர்ப்பை வழங்கியது. 'பிரதமர், மக்களவை எதிர்க்கட்சி தலைவர், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய உயர்நிலைக் குழு, தலைமை தேர்தல் ஆணையர், தேர்தல் ஆணையர்களை குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்ய வேண்டும்' என்று தீர்ப்பில் உத்தரவிடப்பட்டது.

இதைத் தொடர்ந்து, 2023ம் ஆண்டு டிசம்பரில் தலைமை தேர்தல் ஆணையர், தேர்தல் ஆணையர்களை நியமிக்க வகை செய்யும் புதிய சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதன்படி பிரதமர், மூத்த மத்திய அமைச்சர், மக்களவை எதிர்க்கட்சி தலைவர் அடங்கிய உயர்நிலைக் குழுவானது தலைமைத் தேர்தல் ஆணையர், தேர்தல் ஆணையர்களை நியமனம் செய்யும் என்று அறிவிக்கப்பட்டது.

புதிய சட்டத்தின் மூலம் தேர்வு குழுவில் இருந்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி நீக்கப்பட்டு, மூத்த மத்திய அமைச்சர் குழுவில் சேர்க்கப்பட்டார். இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது. இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வருகிறது.

தற்போது தலைமை தேர்தல் ஆணையராக ராஜீவ் குமாரும் தேர்தல் ஆணையர்களாக ஞானேஷ் குமார், சுக்பீர் சிங் சாந்து ஆகியோர் பணியாற்றி வந்தனர். இதில், தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் நேற்று ஓய்வு பெற்றார். அவருக்கு பதிலாக புதிய தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் புதிதாக தேர்தல் ஆணையரை நியமிப்பது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான குழு டெல்லியில் நேற்று முன்தினம் இரவு கூடியது.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கூட்டத்தில் பங்கேற்றனர். இந்த கூட்டத்தில் புதிய தலைமை தேர்தல் ஆணையராக ஞானேஷ் குமாரை நியமிக்க முடிவு செய்யப்பட்டது. அப்போது எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆட்சேபம் தெரிவித்தார். 'தேர்வு குழு தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு பிறகு முடிவு எடுக்கலாம்' என்று அவர் கூறியதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சூழலில் நேற்று முன்தினம் நள்ளிரவில் வெளியிடப்பட்ட அரசாணையில், புதிய தலைமை தேர்தல் ஆணையராக ஞானேஷ் குமார் நியமிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர் அமித் ஷா, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பங்கேற்ற கூட்டத்தில் புதிய தேர்தல் ஆணையரை தேர்வு செய்ய 5 மூத்த ஐஏஎஸ் அதிகாரிகளின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன. இதற்கு ராகுல் காந்தி ஆட்சேபம் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையத்தின் தலைமைத் தேர்தல் அணையரையும், அதன் மற்ற ஆணையர்களையும் தேர்வு செய்வதில் நிர்வாகத் தலையீடு இருக்கக்கூடாது என்பதே சுதந்திரமான அந்த அமைப்பின் மிக அடிப்படை அம்சமாகும். இது தொடர்பான முந்தைய உச்ச நீதிமன்ற உத்தரவுகளும் இதை நிறுவியுள்ளன.

ஆனால், அதையும் மீறி, தேர்வுக் குழுவில் இருந்து தலைமை நீதிபதியையும் நீக்கிவிட்டு தலைமைத் தேர்தல் ஆணையரை நியமித்து மோடி அரசானது நமது தேர்தல் நடைமுறைகளின் நேர்மை மீது கோடிக் கணக்கான மக்களை கவலை கொள்ளச் செய்துள்ளது.

இந்த விவகாரத்தில், எதிர்க்கட்சித் தலைவராக, அம்பேத்கரின் கோட்பாடுகள் மற்றும் நம் தேசத்தை கட்டமைத்த தலைவர்களின் கோட்பாடுகளை நிலைநிறுத்துவது எனது கடமை என நான் கருதுகிறேன்.

நள்ளிரவில் பிரதமரும், உள்துறை அமைச்சரும் இணைந்து புதிய தலைமைத் தேர்தல் ஆணையர் தொடர்பான முடிவை எடுப்பார்கள் என்றால், அது மிகவும் அவமரியாதையான செயல். உச்ச நீதிமன்றம் தேர்தல் ஆணையர் நியமனம் தொடர்பான வழக்கை விரைவில் விசாரணைக்கு எடுக்கவுள்ள நிலையில் பிரதமர், உள்துறை அமைச்சர் எடுத்துள்ள இந்த முடிவு அவர்கள் வகிக்கும் பதவிக்கே அறமற்ற செய்கை." என்று கடுமையாக விமர்சித்துள்ளார்.

இத்தனை சர்ச்சைகளுக்கும் இடையே, புதிய தலைமை தேர்தல் ஆணையராக ஞானேஷ் குமார் நேற்று (புதன்கிழமை) காலை பதவியேற்றுக் கொண்டார்.

## பரமக்குடி அருகே உள்ள பெருங்கரை கிராமத்தில் மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டி



பரமக்குடி பிப்.20

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகே உள்ள பெருங்கரை கிராமத்தில் பரமக்குடி வட்ட உதவி வேளாண் இயக்குநர் மனோகரன் மற்றும் வேளாண் இணை இயக்குநர் முருகேசன் தலைமையில் நடைபெற்ற மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டியின் அறுவடையில் நம்மாழ்வார் வேளாண் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் மாணவர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர். மேலும், ஊரக வேளாண் அனுபவ பயிற்சியின் முன்னோட்டமாக செம்மை நெல் சாகுபடி செயல்முறை பயிற்சி பெற்றனர்.



மதுரை மாவட்டம் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை சார்பாக மகளிர் சுய உதவி குழுக்களுக்கான விழிப்புணர்வு பயிற்சி பட்டறை செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் தாலுகா உணவு வழங்கல் அலுவலர் மயிலேறிநாதன், செல்லம்பட்டி வட்டார இயக்கக மேலாளர் சந்திரசேகர், வட்டார ஒருங்கிணைப்பாளர் சத்யா மற்றும் மகளிர் குழுவினை சார்ந்த 80 க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்றனர்.



இடுக்கி மாவட்டம் மூணாரிலிருந்து வட்டவாடைக்கு செல்லும் சாலையில் எக்கோ பாய்ண்ட் அருகில் ஒரு பேருந்து அதிவேகத்தில் பயணித்து விபத்து ஏற்பட்டது. விபத்தில் இரண்டு மரணம் ஏற்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. பல நபர்களுக்கும் படுகாயங்கள் காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டது, மேலும் ஆம்புலன்ஸ் தேவை உள்ளதால் மூணாரிலிருந்து ஆம்புலன்ஸ் வரவேண்டும் எனவும் தெரியப்படுத்தியுள்ளனர். வாகன ஓட்டுனன் அலட்சியமான செயல் இந்த விபத்திற்கு காரணம் என முதல் கட்ட தகவல் தெரியப்படுத்தியுள்ளனர், இது குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட பகுதியில் தாம்பரம் மாநகர வர்த்தக அணி துணை அமைப்பாளர் முன்னாள் நகர மன்ற உறுப்பினர் இரா.செல்வகுமார் தாயார் இன்று நேற்று இயற்கை எய்தினார் அவர்களின் இல்லத்தில் தாம்பரம் மாநகர சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எம்எல்ஏ மலர் தூவி மரியாதை செலுத்தினர் இதில் மண்டலக்குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன், மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி, ரமணி அதிமூலம், எஸ்.சேகர், ஜோதி குமார், பெரியநாயகம், மற்றும் கழக நிர்வாகிகள் எஸ்.ஜி.கருணாகரன், வேலுமணி, விஜயன், ஜீவா, ரவிக்குமார், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜேஷ், அகஸ்டின், ஷாஜகான், தங்கராஜ், விஜயகுமார், செம்பாக்கம் ரமேஷ், கோடீஸ்வரன், ஐசக், பிரபாகரன், திவாகர், ஏகாம்பரம், குருமணி, வழக்கறிஞர் நடராஜன், விக்கி, கல்யாணி, ரகு, பிரவீன் குமார், நவீன் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்

## ஆர் எஸ் மங்கலம் அருகே பட்டா மாற்றம் செய்ய லஞ்சம் வாங்கிய பகவதி மங்கலம் கிராம நிர்வாக அலுவலர் பணியிடை நீக்கம்

ஆர் எஸ் மங்கலம் பிப்20

இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் தாலுகா சனவேலி அருகே குமிழேந்தலைச் சேர்ந்த விவசாயி தனது தந்தை பெயரில் உள்ள நிலத்திற்கான பட்டா மாறுதல் கேட்டு பகவதி மங்கலம் கிராம நிர்வாக அலுவலர் பார்த்திபன் (வயது28) அணுகினார் பட்டா மாற்றத்திற்கு விவசாயிடம் ரூ.50ஆயிரம் கேட்டுள்ளார். அதனை முதல் தவனையாக ரூ.37ஆயிரமும் பணி முடிந்த பின் மீதி தொகையை தருமாறும் கூறியுள்ளார்.







இது குறித்து விவசாயி இராமநாதபுரம் லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் புகார் செய்தார் அவர்களின் ஆலோசனையின் படி கடந்த 07 ஆம் தேதி ரூ.37ஆயிரம் பணத்தை கொண்டு சென்றபோது ஆர் எஸ் மங்கலத்தில் உள்ள இ சேவை மையத்தில் கொடுக்குமாறு கிராம நிர்வாக அலுவலர் பார்த்திபன் கூறியுள்ளார்.அதன் படி பணத்தை கொடுத்தபோது மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் இ சேவை மைய பொறுப்பாளர் அகமது ஜாப்ரின் அலி வயது(25) என்பவரை கைது செய்தனர் .கிராம நிர்வாக அலுவலர் பார்த்திபன் தலைமறைவாகி ஜாமீனில் வந்துள்ளார் இந்த நிலையில் லஞ்ச வழக்கில் சிக்கியுள்ள கிராம நிர்வாக அலுவலர் பார்த்திபனை தற்காலிக பணியிடை நீக்கம் செய்து இராமநாதபுரம் ஆர்.டி.ஓ .,உத்தரவிட்டுள்ளார்.

## வேலூர் மாவட்டத்தில் முன்னாள் படை வீரர்களுடன், காக்கும் கரங்கள் திட்ட கூட்டம்




வேலூர், பிப்.20

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்டத்தில் முன்னாள் படைவீரர்களுக்கான முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டம் தொடர்பான விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்யும் தேர்வு குழு கூட்டம் மாவட்ட

ஆட்சியர் சுப்புலெட்சுமி, தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முன்னாள் படைவீரர் நலத்துறை உதவி இயக்குநர் லெப் கர்னல் வேலு, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ஜமால் மொய்தீன், துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் முன்னாள் படை வீரர்கள் அவர்களின் வாரிசுதாரர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## நகர்ப்புற வாழ்விடங்களுக்கான தேசிய புவிசார் அறிவியல் ரீதியான நில அளவை திட்டத்தின் மூலம் நகர நில அளவை தொடங்கி வைத்த ஆட்சியர்

காரைக்குடி பிப்20



சிவகங்கை மாவட்டம், நகர்ப்புற வாழ்விடங்களுக்கான தேசிய புவிசார் அறிவியல் ரீதியான நில அளவை திட்டத்தின் (ழிகிரிஷிபிகி) மூலம் நகர நில அளவை செய்யும் பணிக்கான முன்னோட்டமாக தேர்வு செய்யப்பட்டுள்ள காரைக்குடி மாநகராட்சியில், ழிகிரிஷிபிகி திட்ட அலுவலகத்தினை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், காரைக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் திறந்துவைத்து, ஞிநிறிஷி கருவிகளை வழங்கி, நில அளவைப்பணிக்கான வாகனத்தினை கொடியசைத்து துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், காரைக்குடி மாநகரத்தில் NAKSHA (National Geospatial Knowledge based land survey of urban Habitations) நகர்ப்புற வாழ்விடங்களுக்கான தேசிய புவிசார் அறிவியல் ரீதியான நில அளவை திட்டத்தின் மூலம், நில அளவை செய்யும் பணிக்கான முன்னோட்டமாக, செயல்படுத்திடும் பொருட்டு காரைக்குடி மாநகரமானது தேர்வுசெய்யப்பட்டு, அதற்கான பணிகள் காரைக்குடி மாநகராட்சி அலுவலக முதல் தளத்தில் NAKSHA திட்ட அலுவலகமானது துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டமானது, காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் (17 சர்வே வார்டுகள், 237 பிளாக்குகள்) முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்பட்டு, நகரத்தில் ஆழில்லா வானூர்தியை பயன்படுத்தி, நில அளவை மேற்கொள்வதற்கென ளிஸிமி (Ortho rectified Image) உருவாக்கப்படும்.

அதன் தொடர்ச்சியாக, அவ்வொளிப்படத்தின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட புலங்களில் வருவாய் மற்றும் மாநகராட்சி நிர்வாகத்துறைகளின் பணியாளர்கள் அடங்கிய குழுக்களால் நில அளவை பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நவீன நில அளவை கருவிகளைக் கொண்டு (DGPS மற்றும் ETS) நில அளவை செய்து புலவரைபடம் தயார் செய்யப்படும்.


நில அளவை செய்து தயார் செய்யப்பட்ட வரைபடத்தில் ஏதேனும் ஆட்சேபணைகள் இருப்பின், சம்பந்தப்பட்ட நில உரிமைதாரர்கள் உரிய அலுவலர்களிடம் மேல்முறையீடு செய்து கொள்ளலாம். அதனை விதிகளின் படி பரிசீலித்து உரிய தீர்வு காணப்படும். அதனைத்தொடர்ந்து, இறுதி செய்யப்பட்ட நகர்ப்புற நில ஆவணங்கள் வெளியிடப்படும். மேற்குறிப்பிட்ட அனைத்து நடவடிக்கைகளும் முடிவடைந்த பின்னர் புவி அமைவிடப்புள்ளிகளுடன்கூடிய புல வரைபடங்களும், சொத்து வரி தொடர்பான தரவுகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட நில ஆவணங்கள் நில உரிமை தாரர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மேலும், இந்நிகழ்ச்சியில் வாயிலாக, 36 மாமன்ற உறுப்பினர்களுக்கும், பொதுமக்களுக்கும் இத்திட்டம் குறித்தும், இத்திட்டத்தினால் பொதுமக்களுக்கு ஏற்படும் பயன்கள் குறித்தும், விரிவாக எடுத்துரைக்கப் பட்டுள்ளது. இதனை பொதுமக்கள் முழுமையாக அறிந்து கொண்டு, பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, நக்சா திட்டத்தின் கீழ் பணிபுரியும் நில அளவை பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தலைமையில் DGPS கருவிகள் வழங்கப்பட்டு, நில அளவைப்பணிக்கான வாகனமும் துவக்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி , தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ், காரைக்குடி மாநகராட்சி மேயர் சே.முத்துத்துரை , காரைக்குடி மாநகராட்சி ஆணையாளர் சித்ரா , காரைக்குடி மாநகராட்சி துணை மேயர் என்.குணசேகரன் , சிவகங்கை மாவட்ட நில அளவை இயக்குநர் பழனி கார்த்திகை குமரன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை கலைவாணர் அரங்கத்தில் தமிழ்நாடு சிறை மீண்டோர் நல சங்கம் மூலம் விடுதலை அடைந்த 750 முன்னாள் சிறைவாசிகளுக்கு தலா 50,000 வீதம் மூன்று கோடியே 75 லட்சம் நிதி உதவி தமிழக துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் முன்னாள் சிறைவாசிகளுக்கு வழங்கப்பட்டது..



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அரங்கில் திருப்பூர் ஈரோடு கோயம்புத்தூர் மாவட்ட தோட்டக்கலை துறை அலுவலர்களுக்கு திட்டப்பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் கிறிஸ்து ராஜ் மற்றும் தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறை இயக்குநர் குமரவேல் பாண்டியன் தலைமையில் நேற்று நடைபெற்றது.உடன் துணை இயக்குநர் சசிகலா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்..

## திருப்பூரில் தோட்டக்கலைத்துறை அலுவலர்களுக்கு திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம்

திருப்பூர் பிப்20



திருப்பூரில் தோட்டக்கலைத் துறை அலுவலர்களுக்கு திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் (தோட்டக்கலை மற்றும் மலைப்யிர்கள்துறை) இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன் தலைமையில், மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் முன்னிலையில் ) திருப்பூர், ஈரே□டு, மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட தோட்டக்கலைத்துறை அலுவலர்களுக்கு திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் கடந்த (18.02.2025) நடைபெற்றது.

இது குறித்து, (தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை) இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன் தெரிவித்தாவது,

திருப்பூர் மாவட்டத்தில் 80,886 ஹெக்டர் பரப்பில் தென்னை பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலையில், அண்மைக் காலமாக ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களின் தாக்குதல் அதிகம் காணப்படுவதால், வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்தும் வழிமுறைகளை விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேலும், இது குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

மேலும் திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட தோட்டக்கலைத்துறை அலுவலர்களுக்கு திட்டப்பணிகள் குறித்து விரிவான ஆய்வு நடத்தப்பட்டு, திட்டப்பணிகளை விரைந்து முடித்திட தோட்டக்கலைத்துறை அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு (தோட்டக்கலைத்துறை) இயக்குநர் பி.குமரவேல் பாண்டியன் தெரிவித்தார்.

முன்னதாக, (தோட்டக்கலைத்துறை) இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன் திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியம், வீதம்பட்டி ஊராட்சியில் தென்னை விவசாயிகளின் தோட்டங்களில் கள ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்ந ஆய்வுக்கூட்டத்தில், துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) எஸ்.சசிகலா, உதவி இயக்குநர் எம்.மோகனரம்யா, குடிமங்கலம் வட்டார உதவி இயக்குநர் து.செல்வகுமார், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்...

# திருப்பரங்குன்றம் மலைக்கு செல்ல எல்.முருகனுக்கு அனுமதி மறுப்பு! டிஜிபிக்கு அண்ணாமலை கடிதம்

சென்னை, பிப்.20

பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, தமிழக டிஜிபிக்கு எழுதியுள்ள கடிதத்தில், "கடந்த 17ம் தேதி மதுரை மாவட்டத்தில் உள்ள திருப்பரங்குன்றம் கோயிலுக்கு வருகை தந்த மத்திய அமைச்சர் எல்.முருகனை, கோயிலுக்குச் செல்வதை தடுக்கும் முயற்சியில், பாதுகாப்புப் பணியில் இருந்த தமிழக காவல்துறையினர் ஈடுபட்டனர். இதன்மூலம், அவர்கள் இந்த விவகாரத்தை தவறாகக் கையாண்டதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



திருப்பரங்குன்றம் மலையில் உள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில் மற்றும் அருள்மிகு காசி விஸ்வநாதர் கோயிலுக்கு வருகை தருவது உட்பட, அமைச்சரின் பயணத் திட்டம் தொடர்பாக தமிழக காவல்துறையின் முன்அனுமதி பெற்றிருந்த போதிலும், கோயிலின் நுழைவாயிலில் நிறுத்தப்பட்டிருந்த காவல்துறையினரால் அமைச்சர் தடுக்கப்பட்டது வருத்தமளிக்கிறது.

மேலே குறிப்பிடப்பட்ட கோயில்களுக்குச் செல்வதற்கு உடனடியாகத் தடை விதிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து அமைச்சர், அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியபோது, கோயிலுக்குச் செல்ல அனுமதிக்கக் கூடாது என்று உயர் அதிகாரிகளிடம் இருந்து உத்தரவு வந்ததாக அதிகாரிகள் பதிலளித்துள்ளனர் என்பது கூடுதல் வருத்தத்தை அளிக்கிறது.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில், அவர் விரும்பும் இடத்தில் வழிபடும் உரிமையை பறிப்பதன் மூலம் காவல்துறையினர் தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளனர். முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு சமீப காலமாக தமிழ்நாட்டில் பொதுமக்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை உருவாகி உள்ள சூழலில், இந்தச் சம்பவம் பொதுமக்களிடையே கடுமையான சந்தேகத்தை எழுப்புகிறது.

நாடாளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் உள்ள ஒருவரே இப்படி அவமானப்படுத்தப்பட்டால், நமது மாநிலத்தில் சாதாரண மக்களின் நிலை என்ன?." என்று கேள்வி எழுப்பி உள்ளார்.



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலத்திற்கு உட்பட்ட 56,57,58,59 ஆகிய வார்டுகளில் பாலாற்று குடிநீர் குழாய் இணைப்புகள் மற்றும் நீர் தேக்க தொட்டி ஆகியவை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது இதில் தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர் ராஜா,எம்,எல்,ஏ திறக்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ், பகுதி கழக செயலாளர் எஸ்.சேகர், மாமன்ற உறுப்பினர் பி.புகழேந்தி, எஸ்.ஜி.கருணாகரன், வட்ட நிர்வாகிகள், நலச்சங்க நிர்வாகிகள், மாநகராட்சி அதிகாரிகள் பொதுமக்கள் ஆகியோர் உடன் இருந்தனர்..

# சிவகங்கை அருகே சரக்கு வாகனத்தில் கடத்தி வந்த 840 கிலோ ரேஷன் அரிசி பறிமுதல்! இருவரை கைது செய்த போலீசார்

சிவகங்கை,பிப்.20

சிவகங்கை அருகே சரக்கு வாகனத்தில் கடத்திவரப்பட்ட 840 கிலோ ரேஷன் அரிசியை குடிமைப்பொருள் கடத்தல் தடுப்பு போலீஸார் பறிமுதல் செய்தனர்.

சிவகங்கை மாவட்ட குடிமைப் பொருள் கடத்தல் தடுப்பு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் திபாகர் தலைமையில் போலீஸார் சிவகங்கை மதுரை புறவழிச்சாலையில் முத்துப்பட்டி அருகே வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியே வந்த ஒரு மினி சரக்கு வாகனத்தை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். அப்பொழுது அதில் 840 கிலோ எடையுள்ள ரேஷன் அரிசி 40 மூடைகளில் கட்டப்பட்டு இருந்தது.





சிவகங்கை அருகே புதன்கிழமை பறிமுதல் செய்யப்பட்ட ரேஷன் அரிசி மூடைகள்.

இதைத் தொடர்ந்து போலீஸார் ரேஷன் அரிசி மூடைகளையும் வாகனத்துடன் பறிமுதல் செய்தனர்.போலீசார் நடத்திய விசாரணையில் வெள்ளிக்குறிச்சி ,சுல்லங்குடி, விளத்தூர் ஆகிய இடங்களில் உள்ள நியாய விலை கடைகளில் இருந்து விலைக்கு வாங்கி அவற்றை மதுரை வரிச்சியூர் அருகே கிரானைட் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு விற்பனை செய்வதற்கு கொண்டு சென்றது தெரியவந்தது.

இதுதொடர்பாக குடிமை பொருள் கடத்த தடுப்பு போலீஸார் வழக்கு பதிவு செய்து திருப்பூரைச் சேர்ந்த சஞ்சய்குமார்(19) மற்றும் 16 வயது சிறுவன் உள்பட 2 பேரை கைது செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட ரேஷன் அரிசியை நுகர் பொருள் வாணிபக் கழக கிடங்கில் ஒப்படைத்தனர்.




கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் மறுசீரமைக்கபட்ட புதிதாக தோற்றமளிக்கும் கட்டண கழிப்பிடத்தை மேயர் குமரி கிழக்கு மாவட்ட செயலாளர் ரெ.மகேஷ் மாநகராட்சி ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா முன்னிலையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நேற்று திறந்து வைத்தார். மேலும் கழிப்பறை சுத்தமாகவும் சுகதார முறையில் பாரமரிக்க வேண்டும் தேவையான இடத்தில் குப்பை தொட்டி வைக்க வேண்டும் என்றும் மாநகராட்சி அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

# வேலை தேடி குடும்பத்துடன் திருப்பூருக்கு வந்த ஒடிசா பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த 3 இளைஞர்கள் கைது

திருப்பூர், பிப்.20

வேலை தேடி திருப்பூருக்கு குடும்பத்துடன் ரயிலில் வந்த ஒடிசாவைச் சேர்ந்த இளம் பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த வழக்கில் பிஹாரைச் சேர்ந்த இளைஞர்கள் மூவர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 17ம் தேதி திருப்பூர் பனியன் நிறுவனத்தில் வேலை தேடி ஒடிசா மாநிலத்தில் இருந்து 27 வயதுடைய பெண் தனது கணவர் மற்றும் 3 வயது பெண் குழந்தையுடன் ரயிலில் திருப்பூர் வந்தார். திருப்பூரில் வேலை தேடி அலைந்துள்ளனர். ஆனால் எங்குமே வேலை கிடைக்காத நிலையில் புஷ்பா ரயில்வே சந்திப்பு அருகே நின்றிருந்தனர். இதனை நோட்டமிட்ட பிஹார் மாநிலத்தைச் சேர்ந்த முகமது நதிம் (24), முகமது டேனிஸ் (25) மற்றும் 17 வயது சிறுவன் ஆகியோர் தங்களின்பனியன் நிறுவனத்தில் வேலைக்கு ஆட்கள் தேவை எனக் கூறி, லட்சுமி நகர் பகுதியில் உள்ள அவர்கள் தங்கியிருந்த அறைக்கு இளம் பெண் உள்பட 3 பேரையும் அழைத்துச் சென்றுள்ளனர்.




இரவு தங்கள் அறையில் தங்கிக் கொள்ளலாம் என ஆறு பேரும் இரவு உணவு உட்கொண்டு விட்டு அறையில் தூங்கி உள்ளனர். அப்போது 3 வயது குழந்தையின் கழுத்தில் கத்தி வைத்து மிரட்டி பெண்ணை 3 பேரும் பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். வெளியில் கூறினால் கொன்றுவிடுவதாக மிரட்டி அங்கிருந்து அனுப்பி வைத்துள்ளனர்.

அங்கிருந்து வெளியேறிய ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த குடும்பத்தினர் வடக்கு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்த திருப்பூர் வடக்கு போலீஸார் முகமது நதிம், முகமது டேனிஸ் மற்றும் 17 வயது சிறுவனை கைது செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண் திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். கைது செய்யப்பட்டவர்கள் மீது உயிர் பயம் ஏற்படுத்துதல் மற்றும் கூட்டு பாலியல் வன்கொடுமை ஆகிய 2 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# தேனியில் சட்டப்பேரவை மதிப்பீட்டுக் குழு ஆய்வு




தேனி பிப்,20

தேனி மாவட்ட பேரவை மதிப்பீட்டுக் குழு 2024 2005 மதிப்பீட்டுக் குழு தலைவர் காந்திராஜன் அவர்கள் தலைமையில் சேவூர் ராமசந்திரன், பன்னீர்செல்வம், ஓஎஸ்மணியன், கருமாணிக்கம், வெங்கடேஸ்வரன் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார் மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்சித் சிங் சீனிவாசன் முதன்மை செயலாளர், சுப்பிரமணியன், மாவட்ட திட்ட அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர் முன்னிலையில் ஆய்வு செய்தனர். தமிழ்நாடு வேளாண் பொறியியல் துறை வேளாண் இயந்திரம், மயமாக்குதல் திட்டம், பவர் டீல்லர், இயந்திரங்கள் மானியத்தில் வழங்குவதில் தோட்டக்கலை மற்றும் மழை பயிர்கள் துறை விவசாயிகளுக்கான சிறப்பு கண்காட்சி மற்றும் நலத்திட்ட உதவிகளை திட்ட குழ தலைவர் காந்திராஜன் மற்றும் திட்டக்குழு உறுப்பினர்கள் வழங்கினார்கள்



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பம்மல் 1வது மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி மண்டல குழு தலைவர் அவருடைய அலுவலகம் முன்புல் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர் தா.மோ.அன்பரசன் அறிவுறுத்தலின் பேரில் இருமொழி கொள்கைக்கு ஆதரவாகவும், இந்தி திணிப்பை எதிர்த்தும் வண்ண கோலமிட்டு எங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினர்..



வேலூர் மாவட்டம், வேலூர், அரியூர் அடுத்த மலைக்கோடி, உலகளவில் புகழ்பெற்ற தங்க கோயில், ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடத்தில் சரஸ்வதி யாகம் விமர்சையாக நடைபெற்றது. இந்த யாகத்தில் பொதுத் தேர்வு எழுதும் மாணவ மாணவிகளை வர வைத்து சத்தி அம்மா தலைமையில் சிறப்பு யாகங்கள், பூஜைகள் செய்து, மாணவ மாணவிகளுக்கு சக்தி அம்மா ஆசி வழங்கி, எழுதுகோல்களை வைத்து சிறப்பு பூஜைகள் செய்து, எழுதுகோல் பேனாக்களை மாணவ மாணவிகளுக்கு சத்திஅம்மா வழங்கினார். இந்த சிறப்பு நிகழ்ச்சியில் நாராயணி மருத்துவமனை இயக்குனர் பாலாஜி, நாராயணி பீடம் இயக்குனர் சுரேஷ், நாராயணி பீடம் பி.ஆர்.ஓ. மற்றும் பொது மேலாளர் சம்பத், நாராயணி குழும அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் உள்ளூர், வெளியூர் பக்தர்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட பகுதியில் தாம்பரம் மாநகர வர்த்தக அணி துணை அமைப்பாளர் முன்னாள் நகர மன்ற உறுப்பினர் இரா.செல்வகுமார் தாயார் இன்று நேற்று இயற்கை எய்தினார் அவர்களின் இல்லத்தில் தாம்பரம் மாநகர சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எம்எல்ஏ மலர் தூவி மரியாதை செலுத்தினர் இதில் மண்டலக்குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன், மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி, ரமணி அதிமூலம், எஸ்.சேகர், ஜோதி குமார், பெரியநாயகம், மற்றும் கழக நிர்வாகிகள் எஸ்.ஜி.கருணாகரன், வேலுமணி, விஜயன், ஜீவா, ரவிக்குமார், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜேஷ், அகஸ்டின், ஷாஜகான், தங்கராஜ், விஜயகுமார், செம்பாக்கம் ரமேஷ், கோடீஸ்வரன், ஐசக், பிரபாகரன், திவாகர், ஏகாம்பரம், குருமணி, வழக்கறிஞர் நடராஜன், விக்கி, கல்யாணி, ரகு, பிரவீன் குமார், நவீன் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் , மனிதநேய மக்கள் கட்சியின் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான எம்.எச்.ஜவாஹிருல்லா இல்லத்திற்கு நேரில் சென்று அவரது உடல் நலம் குறித்து விசாரித்தார். அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சி தலைவர் இராமலிங்கம், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் ரசூல் ஆகியோர் உடன் உள்ளனர்.




திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் சு.இராமமூர்த்தி ஆகியோர் தலைமையில் மாநகராட்சி மைய அலுவலக வளாகத்தில் திருப்பூர் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்து வரி மற்றும் காலியிட வரியினை பொதுமக்கள் எளிய முறையில் செலுத்தும் வகையில். Gpay,Paytm,Phonepe, ஆகிய செயலிகளை பயன்படுத்திக்கொள்வதற்கான செயல்முறைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை பொதுமக்களிடம் வழங்கி துவக்கி வைத்தார். உடன் துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம் உதவி ஆணையாளர் கணக்கு (பொது) தங்கவேல் ராஜன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஒட்டன்சத்திரத்தில் திமுகவின் வாக்குச்சாவடி பாக முகவர்களுக்கான ஆலோசனை கூட்டம்

திண்டுக்கல், பிப்.20




திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் மேற்கு மத்திய ஒன்றிய கழகத்தின் சார்பில் காலாஞ்சிபட்டியில் வாக்குச்சாவடி பாக முகவர்கள், மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் தேர்தல் பொறுப்பாளர் கே. பரணி மற்றும் மாவட்ட துணை செயலாளர் ராஜாமணி உள்ளிட்டோர் தலைமையில் நடைபெற்றது,

நிகழ்வில் காவேரியம்மாபட்டி, தங்கச்சியம்மாபட்டி, காலாஞ்சிபட்டி, லக்கியங்கோட்டை, வடகாடு, உள்ளிட்ட மத்திய ஒன்றியத்துக்கு உட்பட்ட 14 ஊராட்சிகளை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி பாக முகவர்கள் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர், இக்கூட்டத்தில் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று திராவிட மாடல் ஆட்சி முதலமைச்சர் அவர்கள் தமிழகம் முழுவதும் 200க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைய அயராது பாடுபடுவோம் என உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்,

நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர் ராஜாமணி, ஒன்றிச் செயலாளர் எஸ். ஆர். கே. பாலு, பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ், மற்றும் ஒன்றிய துணைச் செயலாளர்கள் கழக உடன்பிறப்புகள் ஏராள மானோர் கலந்து கொண்டனர்,




திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில் பயனாளிக்கு காதொலிக் கருவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் வழங்கினார்.உடன் மாவட்ட வருவாய் துறை அலுவலர் கார்த்திகேயன் உள்ளார்.

## திண்டுக்கல் மாவட்டத்தில் 45 புதிய வழித்தடங்களில் சிற்றுந்துகள் இயக்க விண்ணப்பிக்கலாம்

திண்டுக்கல், பிப்.20

திண் டுக்கல் மாவட்டத்தில் புதிய 45 வழித்தடங்களில் சிற்றுந்துகள் இயக்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. என மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன் தெரிவித்துள்ளார்

இதுகுறித்து அவர் தெரிவிக்கும் போது

தமிழகம் முழுவதும் புதிய வழித்தடங்கள் களில் இயக்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது தக்க வகையில் அரசினால் புதிய விரிவான திட்டம் அறிவிக்கப்படது இதனை தொடர்ந்து, திண்டுக்கல் வட்டார போக்குவரத்து அலுவலக எழிலைக்குட்பட்டு. பகுதியில் புதிய வழித்தடங்களும் வடடார போக்குவரத்து அலுவலக எல்லைக்குட்பட்டு 12 புதிய வழித்தடங்களும் என மொத்தம் 45 வழித்தடங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்துள்ளார் புதிய வழித்தடங் கள் தொடர்பான விரிவான விபரங்களை திண்டுக்க மாவட்ட அரசிதழில் வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதிய சிற்றுந்து வழித்தடம் விபரம் வழிக்காட்டுதல் போக்குவரத்து வடமதுரை பிஸ் நிறுத்தம். ஆலம்பட்டி முதல் காளியம்மன்கோயில் அம்பலூர் பால நிறுத்தம் காரமடை முதல் மல்லையாபுறம் வரை பூஞ்சோனலை முதல் தாடிக்கொம்பு வரை உள்ளிட்ட 32 வழித்தடங் கள் திண்டுக்கல் வட்டார போக்குவரத்து அலுவலக மேற்கண்ட 45 வழித்தடங்களில் சிற்றுந்துகள் இயக்க வின்ணப்பிக்க விரும்புவோர் வழித்தட விபரத்தினை குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பிப்ரவரி 24க்குள் விண்ணப் பிக்கலாம். ஒரு வழித்தடத் திற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்படு மாயின் குலுக்கல் முறையில் ஒருவர் தேர்வு செய்யப்படும்




கன்னியாகுமரி மாவட்டத்திற்கான 2025-26 நிதியாண்டுக்கான வளம் சார்ந்த கடன் திட்டத்தை தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி தயாரித்துள்ளது. இத்திட்டத்தை கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலர், ஜெ.பாலசுப்பிரமணியன் மாவட்ட வங்கியாளர்கள் கூட்டத்தில் வெளியிட்டார்.

## கன்னியாகுமரி மாவட்டம் கண்ணாடி இழை தரைத்தள பாலத்தினை ஆய்வு செய்த அமைச்சர்

கன்னியாகுமரி, பிப்.20



கன்னியாகுமரி மாவட்ட நெடுஞ்சாலைத்துறை சார்பில் கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை முதல் சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபம் வரை சுற்றுலா பயணிகள் நடந்து செல்வதற்கு ஏதுவாக திருவள்ளுவர் சிலை முதல் விவேகானந்தர் நினைவு மண்டபம் வரை அமைக்கப்பட்டுள்ள கண்ணாடி இழை தரைத்தள பாலத்தினை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, தலைமையில் நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு செயலாளர் டாக்டர். செல்வராஜ், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு செய்தியாளர்களிடம் பேசுகையில்:

முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அய்யன் திருவள்ளுவர் சிலையை கடந்த 2000 ஆண்டு திறந்து வைத்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் விவேகானந்தர் பாறை முதல் அய்யன் திருவள்ளுவர் சிலையினை இணைத்து சுற்றுலாப்பயணிகள் அய்யன் திருவள்ளுவரை கண்டு களித்திட ரூ.37 கோடி மதிப்பில் கண்ணாடி இழை தரைத்தளம் பாலம் அமைத்து கடந்த 30.12.2024 அன்று நடைபெற்ற திருவள்ளுவர் சிலை நிறுவி 25ம் ஆண்டு வெள்ளி விழா நிகழ்ச்சியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

கண்ணாடி இழை தரைத்தள பாலத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் திறந்து வைத்ததைத்தொடர்ந்து கன்னியாகுமரிக்கு வெளிநாடுகள் மற்றும் இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்தும், பிற மாவட்டங்களிலிருந்தும் ஏராளமான சுற்றுலாப்பயணிகள் வருகை தந்து அய்யன் திருவள்ளுவர் சிலையினை கொண்டு தான் கண்டுகளிப்பதோடு, கண்ணாடி இழை தரைத்தளபாலம் வாயிலாக நடந்து சென்று கடலின் அழகினை கண்டு மகிழ்ச்சி அடைகிறார்கள்.

ஜனவரி மாதத்தினை பொறுத்த வரை மட்டும் 2 இலட்சத்தில் பதினாயிரம் சுற்றுலா பயணிகளும், பிப்பரவரி 1 முதல் பிப்பரவரி 17ம் தேதி வரை மட்டும் 1 இலட்சத்தி இருபத்தி நாலாயிரம் சுற்றுலா பயணிகள் என மொத்தம் 3.50 இலட்சம் சுற்றுலா பயணிகள் இதுவரை பார்வையிட்டுள்ளார்கள்.

இன்றைய ஆய்வின் நோக்கம் கண்ணாடி பாலத்தில் சிறு சிறு பணிகளை பார்வையிட்டு, மீண்டும் பாலத்தின் உறுதித்தன்மையினை ஆராய சென்னை ஐஐடியை சார்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் செயலாளர் தலைமையில் வருகை புரிந்துள்ளார்கள். குறிப்பாக கண்ணாடி இழைப்பாலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அலங்கார மின்விளக்குகள் அமைக்கும் பணி, திருவள்ளுவர் சிலையினை மேம்படுத்தும் பணிகள் உள்ளிட்டவைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணிகளும் நடைபெற்று வருகிறது. 2025ம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம் புதிய அத்தியாயத்தினை படைத்துள்ளது. இவ்வாறு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் பேசினார்கள்.

நடைபெற்ற ஆய்வில் சிறப்பு அலுவலர் திட்டம் சந்திர சேகர், தலைமை பொறியாளர் கட்டுமானம் மற்றும் பாரமரிப்பு சந்தியபிராகாஷ், கண்காணிப்பு செயற்பொறியாளர் (திருநெல்வேலி) திருமதி. சராதா, நெடுஞ்சாலைத்துறை கோட்ட செயற்பொறியாளர் சத்தியமூர்த்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆஸ்டின், கன்னியாகுமரி பேரூராட்சி தலைவர் குமரி ஸ்டீபன், துறை அலுவலர்கள், உள்ளாட்சிபிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## முன்பதிவு இல்லாத பெட்டியில் பயணத்தின் போது இடையூறு செய்ததால் சேது விரைவு வண்டியில் வெடிகுண்டு புரளி கிளப்பியவர் கைது

மானாமதுரை பிப்20



சென்னையில் இருந்து நேற்று முன்தினம் மாலை 5:35க்கு கிளம்பிய சேது விரைவு வண்டியில் கடலூர் மாவட்டம் விருதாச்சலத்தை சேர்ந்த கோவிந்தன் மகன் தண்டாயுதபாணி (31) இவர் ராமேஸ்வரத்தில் ஹோட்டலில் புரோட்டா மாஸ்டராக பணிபுரிந்து வருகிறார்.

நேற்று முன்தினம் மாலை சேதுவிரைவு வண்டியில் விருதாச்சலத்தில் ஏறிய தண்டாயுதபாணி அதில் முன்பதிவு இல்லாத பெட்டியில் ஏறி உள்ளார் கூட்டம் அதிகமாக இருக்கவே முன்பதிவு பெட்டியில் தரையில் அமர்ந்து பயணம் செய்து கொண்டிருந்தாக கூறபடுகிறது தூங்கும் போது ரயிலில் பயணம் செய்த மக்கள் போவதும் வருவதுமாக இருந்து உள்ளனர் இதனால் தூக்கத்தில் தொந்தரவு செய்ததால் ஆத்திரமடைந்த தண்டாயுதபாணி சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ரயில் நிலையத்திற்கு நேற்று முன்தினம் இரவு 2 மணிக்கு வரும் பொழுது கட்டுப்பாட்டு அரையான 100க்கு அடித்து ஒரு பையில் வெடிகுண்டு இருப்பது தெரிகிறது என்றும் கூறியுள்ளார் உடனடியாக கட்டுப்பாட்டு அறை அதிகாரிகள் நீங்கள் இப்போது எங்கு இருக்கிறீர்கள் ? என்று கேட்டுள்ளனர் அதற்கு ரயில் மானாமதுரையில் நிற்கிறது என்று கூறியுள்ளார் அருகே உள்ள போலீசாரிடம் போனை கொடுக்க சொல்லி உள்ளார் உடனடியாக போனை வாங்கி கட்டுப்பாட்டு அறையில் உள்ளவர்கள் போலீசாரிடம் போனை கொடுக்க சொல்லி உள்ளனர் கட்டுப்பாட்டு அறையில் உள்ளவர்கள் ரயில்வே போலீசாரிடம் கூறியுள்ளனர் இருப்பு பாதை காவல்துறையினர் உடனடியாக அந்த பெட்டி ஏறி முழுமையாக சோதனை செய்தனர் அவர் சொன்ன மாதிரி எந்தவித மர்ம பொருளும், வெடிகுண்டு இல்லை என்று முடிவுக்கு வந்தனர் பின்னர் தண்டாயுதபாணியிடம் ஏன் இப்படி புரளியை கிளப்பி உள்ளீர்கள் என்று கேட்டதற்கு நான் பயணம் செய்த பெட்டியில் அதிகமான கூட்டம் இருந்ததாகவும் தூங்கும்போது மக்கள் போவதும் வருவதுமாக இருந்ததால் எனக்கு தொந்தரவாக இருந்ததும் அதனால் கோபம் வந்தது என்றும் இதனால் ரயில்வே கட்டுப்பாட்டறைக்கு வெடிகுண்டு இருப்பதாக தகவலை கூறியதாகவும் கூறியுள்ளார்.

காரைக்குடி இருப்பு பாதை ஆய்வாளர் கார்த்திகேயன் மானாமதுரை சார்பு ஆய்வாளர்கள் வசந்தி, தனுஷ்கோடி, துரை, சிறப்பு சார்பு ஆய்வாளர் அய்யாதுரை மற்றும் காவல்துறையினர் அவரை கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்..

## மானாமதுரை அருகே மேலப்படாவூரில் கை வெட்டப்பட்ட இளைஞருக்காக விசிக கண்டன ஆர்ப்பாட்டம்

மானாமதுரை, பிப்20




சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியம் மேலபிடாவூர் கிராமத்தில் இரு சக்கர வாகனத்தில் சென்றபோது பட்டியலின மாணவரின் கையை வெட்டிய சாதிவெறியர்களை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சிவகங்கை மாவட்டத்தை சாதிய வன்கொடுமை மாவட்டமாக அறிவிக்ககோரியும் சிவகங்கை மாவட்ட தலைநகரில் தெற்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் பாலையா தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது... ஆர்ப்பாட்டத்தில் துணை பொதுச்செயலாளர் கனியமுதன், கருத்தியல் பரப்புரை துணை செயலாளர் செல்லப்பாண்டியன், மண்டல துணை செயலாளர் முத்துராசு, மாவட்ட செய்தித்தொடர்பாளர் மூ.ஆதிவளவன் வடக்கு மாவட்ட செயலாளர் இளைய கௌதமன், முன்னாள் மாவட்ட செயலாளர் திருமொழி, மாவட்ட பொறுப்பாளர்கள் பாஸ்கரன், சேட் முகமது, திருப்புவனம் அய்யனார், மெ.கணேசன்,

கல்லல் ஆதி ஒன்றிய செயலாளர்கள் சிவகங்கை ராமதாஸ், கார்த்திக், திருப்புவனம் கண்ணன்,

முனியசாமி, இளையான்குடி ஜேம்ஸ் வளவன், காளையார்கோவில் காளிதாஸ், மானாமதுரை கிருஷ்ண மூர்த்தி, மாவட்ட அமைப்பாளர்கள் மங்கலம் ஜான்சன், கார்த்திக், அஜித் வளவன், வழக்கறிஞர் பாலமுருகன், மற்றும் ஏராளமான மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர பொறுப்பாளர்கள் ஏராளமானோர் திரளாக கலந்து கொண்டனர். காளையார்கோவில் ஒன்றிய செயலாளர் வெற்றி விஜயன் நன்றியுரை வழங்கினார்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161